


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 58– திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 21 – திங்கள்கிழமை 07 அக்டோபர் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 58 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 21 - Monday 07 October 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




## உயிர்களிடத்து வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் காணாத

# வள்ளலாரின் சமரச சுத்தவழியைப் பின்பற்றுவோம்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (05.10.2024) தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை யொட்டி எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



**சென்னை, அக். 7-**

**அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "உயிர்களிடத்து வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் காணாத சமத்துவ நெறியைப் போற்றுவோம்!" என கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற ஆண்டுமுதலாக, "தனிப் பெருங்கருணை நாள்" எனக் கொண்டாடி வரும் அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்தநாள் இன்று!**

**"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்!"**

**"மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்!" என அவர் காட்டிய சமரச சுத்த வழியை எந்நாளும் பின்பற்றுவோம்!**

**உயிர்களிடத்து வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் காணாத சமத்துவ நெறியைப் போற்றுவோம்!**

**வாழ்க வள்ளலார்!**

இவ்வாறு அப்பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஒவ்வொரு வார்டிலும் வாட்ஸ்அப் குழுக்களை உருவாக்கி

# பேரிடர் காலத்தில் மக்களைக் காப்பாற்றுவோம்!

## சென்னையில் நடைபெற்ற பருவகால மழை ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, அக். 7-**

**"வடகிழக்குப் பருவ மழையின்போது அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி மழையிலிருந்து மக்களைக் காப்பாற்றுவோம்" என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

சென்னை, தலைமைச் செயலகம் - நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழையின் போது ஏற்படும் இடர்களைத் தவிர்ப்பதற்காக நடைபெற்று வரும் முன்னெச்சரிக்கைப் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைகளை வழங்கினார். பொதுமக்களின் கோரிக்கைகள் - சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளின் அடிப்படையில், மாநகராட்சி மண்டலங்கள் மற்றும் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை விளக்கிக் கூறினர்.

அப்போது அவர் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு, கொரோனா பெருந்தொற்று மற்றும் பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, என அடுத்தடுத்து எதிர்கொண்ட பேரிடர்களை மிகச்சிறப்பாக கையாண்டு மக்களைக் காப்பாற்றியது.

### பல்வேறு திட்டப் பணிகள்

அந்த கனமழை, வெள்ளப் பெருக்கைப் பாடமாகக் கொண்டு மழைநீர் வடிகால்களைச் சீரமைப்பது, வெள்ளம் வடியும் கால்வாய்களைத் தூர்வாறும் பணியை வேகப்படுத்துவது என பல்வேறு திட்டப் பணிகளை நம் அரசு மேற்கொண்டது. இன்னும் பல பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆனாலும், கடந்த ஆண்டு வரலாறு காணாத மழையின்போது மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளானார்கள்.



அவற்றையெல்லாம் மனதில் வைத்து இந்த மழையை எதிர்கொள்ள நாம் தயாராகிக்கொண்டு இருக்கிறோம்.

வடகிழக்குப் பருவமழை, இன்னும் ஓரிரு வாரங்களில் தொடங்கிவிடும் என்று தெரிகிறது. அதனால், மழைநீர் வடிகால் பணி, மின் வாரிய கேபிள்களை அமைக்கும் பணி, குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணி, என ஏற்கெனவே செய்து வரும் பணிகளை விரைந்து முடிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காமல் தடுக்கும்வகையில், புதிய பணிகளை எடுப்பதற்கு முன், நாம் ஏற்கெனவே எடுத்து முடிக்காமல் உள்ள பணிகளைச் செய்து முடிக்கும்படி உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

### தூர்வாறும் பணிகள்!

நேற்றுகூட மாண்புமிகு நம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள், மழைநீர் வடிகால்கள் தூர்வாறும் பணிகள், நீர் வழிக்கால்வாய்களில் ஆகாயத் தாமரைகளை அகற்றும் பணி என்று மழைக்காக நாம் எடுத்து வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து எடுத்துக் கூறியிருந்தார்கள்.

தாழ்வான பகுதிகள், மழைக் காலங்களில் அதிகமாக தண்ணீர் தேங்கும் பகுதிகளின் பட்டியல், நம்மிடம் வார்டு வாரியாக உள்ளது. அதனால், தேங்கும் மழைநீரை வெளியேற்றும் மோட்டார் பம்புகள், மக்களைக் காப்பாற்றி அழைத்து வருவதற்கான படகுகளை ஒரே இடத்தில் வைத்திராமல், அந்தந்த வார்டுகளுக்கு இப்போதே பிரித்து வழங்கி, பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியம்.

தாமதத்தைத் தவிர்க்க, எங்கெல்லாம் மழைநீர் அதிகமாக தேங்குமோ அதற்கு அருகிலேயே சமையற்கூடங்களை அமைத்து, சமைத்து வழங்கினால், மக்களுக்கு உரிய நேரத்தில் நம்மால் உணவு வழங்க முடியும். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால் பாக்கெட்டுகளை வழங்க கவுன்சிலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நாடும் போது அவர்கள் கேட்கும் பால் பாக்கெட்டுகளை உடனடியாக வழங்க உரிய அறிவுறுத்தல்களை, ஆவின் நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### ஆயிரம் பால் பாக்கெட்டுகள்!

ஒரு வார்டுக்கு குறைந்தபட்சம் ஆயிரம் பால் பாக்கெட்டுகள், ஆயிரம் பிரட் பாக்கெட் என்ற அளவில் வழங்குவதற்கு நாம் இப்போதே தயாராக இருக்க வேண்டும். அதற்கான அறிவுறுத்தல்களை, நம் மாநகராட்சி வருவாய் அலுவலர்களுக்கு வழங்கி இருக்க வேண்டும்.

சென்னையில் அம்பத்தூர், மாதவரம், காக்களூர் ஆகிய இடங்களில் ஆவின் பால் பாக்கெட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த மழையில் அந்தப் பகுதிகளில் மழைநீர் சூழ்ந்ததால் பால் பாக்கெட்டுகளை அங்கிருந்து வெளியே எடுத்து வருவதில் சிரமம் ஏற்பட்டது. அதுபோன்ற சூழல் ஏற்படாத வகையில் அந்த இடங்களையும் ஆய்வு செய்து சரிசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு பெய்த கனமழையின்போது பெரும்பாலான இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. செல்போன்களும் செயல்படவில்லை. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஒருவரை மற்றவர்கள் தொடர்பு கொள்ள மிகுந்த சிரமம் ஏற்பட்டது. அதனால் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அளவில் பயன்படுத்துவதற்கு வயர்லஸ் போன்களை வழங்கலாமா என்பது குறித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கூடுதலாக பணியாளர்கள்!

கடந்த மழையின்போது, சாலையில் விழும் மரங்களை அப்புறப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. மாநகராட்சியின் பார்க் துறையில் பணியாளர்கள்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்